பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
19 07 2025 12 40
சனிக்கிழமை பிற்பகல்

ஆகாஷவாணி செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- தொழில் முதலீட்டை அதிகரிப்பதற்கு மத்திய அரசு ஊக்கமளித்து வருவதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

- மின்னணு பொருட்களின் ஏற்றுமதி தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

- தேசிய விளையாட்டு நிர்வாக மசோதா விளையாட்டுத் துறையில் புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தும் என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ கூறியுள்ளார்.

- தீவிரவாத செயல்களை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள இயலாது என்றும், பஹல்காம் தாக்குதல் சம்பவம் கண்டனத்திற்கு உரியது என்றும் சீனா தெரிவித்துள்ளது.

- ஆசிய ஜூனியர் பேட்மிண்டன் போட்டியின் கலப்பு குழுப் பிரிவில் இந்தியா காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

தொழில் முதலீட்டை அதிகரிப்பதற்கு மத்திய அரசு ஊக்கமளித்து வருவதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், உத்ராகண்ட் முதலீட்டாளர்கள் மாநாட்டில் இன்று பங்கேற்கவுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையின் கீழ் பிஜேபி ஆட்சிப் பொறுப்பில் உள்ள மாநிலங்களில் முதலீட்டை பெருமளவில் ஈர்த்துவருவதாக அவர் கூறியுள்ளார்.

இதன் காரணமாக கூடுதல் வேலைவாய்ப்புகள் உருவாக வாய்ப்புள்ளதாகவும் திரு அமித் ஷா குறிப்பிட்டுள்ளார்.

>><><><><<

மின்னணு பொருட்களின் ஏற்றுமதி தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

ஹைதராபாத் ஐஐடி-யின் பட்டமளிப்பு விழாவில் இன்று அவர் கலந்து கொண்டு பேசினார்.

மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர் மின்னணு பொருட்களின் ஏற்றுமதி 8 மடங்கு அதிகரித்துள்ளதாக அவர் கூறினார்.

தற்போது 4 ஆயிரம் கோடி அமெரிக்க டாலர் அளவுக்கு மின்னணு பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுவதாக அமைச்சர் தெரிவித்தார்.

நாட்டின் முதலாவது புல்லட் ரயில் திட்டம் அடுத்த இரண்டாண்டுகளுக்குள் செயல்பாட்டிற்கு வரும் என்றும் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறினார்.

>><><><<

தேசிய விளையாட்டு நிர்வாக மசோதா விளையாட்டுத் துறையில் புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தும் என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ கூறியுள்ளார்.

செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் இதனைத் தெரிவித்துள்ள அவர், இந்த மசோதா நாடாளுமன்றத்தின் மழைக்காலக் கூட்டத் தொடரில் தாக்கல் செய்யப்படும்.

இக்கூட்டத் தொடர் வரும் திங்கட்கிழமை தொடங்கவுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த மசோதா குறித்து விரிவான கலந்தாலோசனைகள் நடத்தப்பட்டதாகவும் அவர் கூறினார்.

விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்கு இந்த மசோதா உத்வேகம் அளிக்கும் என்றும் திரு கிரண் ரிஜிஜூ தெரிவித்தார்.

>><><><<

பசுமை ஹைட்ரஜன் உற்பத்தியில் புதுமைக் கண்டுபிடிப்புகள் பாராட்டுதலுக்குரியது என்று புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

பெங்களூரில் உள்ள இந்திய அறிவியல் மையத்தில் பசுமை எரிசக்தி தொடர்பான நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

இந்த மையம் புதுமைக் கண்டுபிடிப்புகளில் பல்வேறு சாதனைகளை படைத்து வருவதாகவும் அவர் கூறினார்.

சர்வதேச ஆராய்ச்சிப் பணிகளில் இந்த மையம் உரிய அங்கீகாரம் பெற்றுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

>><><><<

மக்கள் நலனில் அக்கறையின்றி காங்கிரஸ் கட்சி செயல்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு சிராக் பாஸ்வான் குற்றம் சாட்டியுள்ளார்.

பாட்னாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஏழை மக்களின் மேம்பாட்டிற்காக மத்திய அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களை பட்டியலிட்டார்.

தேசிய ஜனநாயக கூட்டணி அரசுகள் ஊழலற்ற நிர்வாகத்தை உறுதி செய்துள்ளதாகவும் திரு சிராக் பாஸ்வான் தெரிவித்தார்.

>><><><<

தேயிலை ஏற்றுமதி கடந்த நிதியாண்டில் 2 புள்ளி எட்டு ஐந்து சதவீதம் அதிகரித்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

தேயிலை உற்பத்தி மற்றும் ஏற்றுமதியை மேலும் அதிகரிப்பதற்கு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தேயிலை வாரியம் தெரிவித்துள்ளது.

>><><><<

ரயில் நிலையங்கள் மற்றும் ரயில்களில் அனுமதியின்றி பொருட்கள் விற்பனை செய்வதை தடுக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருப்பதாக மத்திய அரசு கூறியுள்ளது.

பொருட்களை விற்பனை செய்வோருக்கு உரிய அடையாள அட்டைகளை வழங்குமாறு அதிகாரிகளுக்கு ரயில்வே அறிவுறுத்தியுள்ளது.

இதற்காக அடையாள அட்டை ஒன்றையும் ரயில்வே வடிவமைத்துள்ளது.

இதனை அனைத்து மண்டலங்களும் செயல்படுத்துமாறு ரயில்வே கேட்டுக்கொண்டுள்ளது.

>><><><><<

பஹல்காம் தீவிரவாத தாக்குதல் சம்பவத்திற்கு சீனா கண்டனம் தெரிவித்துள்ளது.

பெய்ஜிங்கில் செய்தியாளர்களிடம் பேசிய அந்நாட்டு வெளியுறவுத் துறையின் செய்தித் தொடர்பாக திரு **Linjian,** தீவிரவாத செயல்களை சீனா ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது என்றார்.

தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும் என்றும் திரு **Linjian** கூறினார்.

>><><><><<

இந்தியா – அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தம் குறித்த 5 ஆவது சுற்று பேச்சுக்கள் வாஷிங்டனில் நிறைவடைந்தன.

நான்கு நாட்கள் இந்த பேச்சுக்கள் நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்வதற்கான அம்சங்கள் குறித்து இதில் விரிவாக விவாதிக்கப்பட்டதாக அவர் மேலும் கூறுகிறார்.

>><><><><<

நாட்டின் சுதந்திரத்திற்காக பாடுபட்ட மங்கள் பாண்டேயின் பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி பிரதமர் திரு நரேந்திர மோடி விடுத்துள்ள செய்தியில், மங்கள் பாண்டேயின் துணிச்சல் இன்றும் நமக்கெல்லாம் உத்வேகம் அளிப்பதாக கூறியுள்ளார்.

உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா விடுத்துள்ள செய்தியில், சுதந்திர போராட்டத்திற்கு அடித்தளமிட்டவர் மங்கள் பாண்டே என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

மத்திய அமைச்சர்கள் திரு ஜெ பி நட்டா, திரு ராஜ்நாத் சிங் ஆகியோரும் சுதந்திர போராட்டத்தில் மங்கள் பாண்டேயின் பங்களிப்பு குறித்து எடுத்துரைத்துள்ளனர்.

>><><><><<

கர்நாடக உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக திரு **Vibhu Bakhru** பதவியேற்றுக்கொண்டார்.

பெங்களுருவில் ஆளுநர் திரு தாவர்சந்த் கெலாட் அவருக்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

>><><><><<

சத்தீஷ்கரில் நேரிட்ட சாலைவிபத்தில் 4 பேர் உயிரிழந்தனர். 2 பேர் காயமடைந்தனர்.

**Kanker** மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் சென்று கொண்டிருந்த கார் நிலைதடுமாறி சாலையோரத்தில் உள்ள தடுப்புச் சுவர் மீது மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

>><><><><<

மேற்கு வங்கத்தின் **Sevoke** மற்றும் சிக்கிமின் **Rangpo** இடையேயான தேசிய நெடுஞ்சாலையில் நிலச்சரிவு ஏற்பட்டதன் காரணமாக போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

மேற்கு வங்கத்தின் **Kalimpong** மாவட்டத்திற்கு உட்பட்ட **Birik Dara** பகுதியில் நிலச்சரிவு ஏற்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பாதிக்கப்பட்ட பகுதிகளை சீரமைக்கும் பணி முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

>><><><><<

உத்தரப்பிரதேசத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை குறித்த காலத்திற்குள் நிறைவேற்றுமாறு அம்மாநில முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

பாதிப்பு குறித்த ஆய்வுகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளதாக அம்மாநில அரசின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

வெள்ள பாதிப்பை குறைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று திரு யோகி ஆதித்யநாத் அறிவுறுத்தியுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையே, கேரளாவின் ஒருசில பகுதிகளில் இன்றும், நாளையும் அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், அசாம், கர்நாடகா மற்றும் தமிழகத்தின் ஒருசில பகுதிகளிலும் கனமழை பெய்யக்கூடும் என்று கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில், தமிழகத்தின் தேனி மாவட்டத்தில் உள்ள சுருளி அருவியில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளதால் சுற்றுலாப் பயணிகள் குளிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - ராஜ்குமார் - 31 செகண்ட்ஸ்)

இந்நிலையில் நீலகிரி மாவட்டத்தில் பெய்து வரும் மழை காரணமாக, சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை கருதி, சுற்றுலா தளங்கள் இன்று மூடப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - சரவணன் - 26 செகண்ட்ஸ்)

>><><><<

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய ஜூனியர் பேட்மிண்டன் போட்டியின் கலப்பு குழுப் பிரிவில் இந்தியா காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இந்தோனேஷியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் இரண்டாவது லீக் ஆட்டத்தில் இந்தியா இன்று ஐக்கிய அரபு எமிரேட்டை வென்றது.

>><><><<

இந்தியா - இங்கிலாந்து இடையேயான 2-வது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டி லண்டனில் இன்று நடைபெறுகிறது.

3 போட்டிகளைக் கொண்ட இந்த தொடரின் முதல் ஆட்டத்தில் வெற்றி பெற்று இந்தியா முன்னிலை பெற்றுள்ளது.

>><><><<

உலக பல்கலைக் கழக விளையாட்டுப் போட்டிகளின் டேபிள் டென்னிஸ் மகளிர் பிரிவில் இந்தியா காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஜெர்மனியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்தியா – பிரான்சை வென்றது.

பேட்மிண்டன் போட்டியின் கலப்பு குழு பிரிவில் இந்தியா காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

>><><><<

செக் குடியரசில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ரித்துஜா போஸ்லே சீனாவின் **Wushuang** இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை 2-6, 6-2, 10-8 என்ற செட்கணக்கில் செக்குடியரசின் **Smekalova –** ஸ்லோவேக்கியாவின் **Svatikova** இணையை வென்றது.

>><><><<

இந்தியா ஓபன் தடகள சாம்பியன் போட்டி பாட்னாவில் இன்று தொடங்கியது.

>><><><<